4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990(ஆ.இ.)

13–25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஊ) குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த திருத்த சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1990*) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுபவர்கள் ஐவர்; ஆளுக்கு ஐந்து மணித்துளிகள்.

* திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள, 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) முன்வடிவில், விவசாயத் தொழிலாளிகள், விவசாயக் கூலிகள் மற்றும் ஊரக கைவினைஞர்கள் ஆகியோருக்கு தனியார் நிலங்களில் ஆண்டாண்டுக் காலமாகக் குடியிருந்து வருபவர்களுக்கு, குடியிருப்புச் சட்டத்தின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வந்துள்ளது. அதேநேரத்தில்,—தனியார் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அதேநேரத்தில். அரசு புறம்போக்கு நிலங்களில், அதாவது, வாய்க்கால் புறம்போக்கு, வாரி புறம்போக்கு, ஊரணி புறம்போக்கு, மேய்ச்சல் தரைப் புறம்போக்கு போன்ற பகுதிகளில் குடியிருக்கக்கூடிய, கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் இதுபோன்ற சட்டத்தை—நீண்ட நெடுங்காலமாகக் குடியிருந்து வருபவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், அப்படி

---

* 9–5–1990-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.